**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044351

1. District : மாவட்டம் கோவை | PS: காவல்நிலையம் ல.ஒ.த.க. பிரிவு, கோவை | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 23/2021 | Date: நாள் 1.10.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 7(a).
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 30.9.2021 | Date to : நாள் வரை 01.10.2021
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 1830 hrs | Time to : நேரம் வரை 0045 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 1.10.2021 | Time : நேரம் 1500 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 1.10.2021 | Time : நேரம் 1500 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமான

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25 Km தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி RTO சோதனைச்சாவடி, கந்தேகவுண்டன் சாவடி (வெளிச்செல்கை) கோவை
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R.ஸ்ரீதேவி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனிவட்டாட்சியர் குடிமைப்பொருள் | (g) Address : முகவரி கோயம்புத்தூர் தெற்கு மற்றும் சிறப்பு துணை ஆய்வுக்குழு உறுப்பினர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. S. சையத் ஜவாஹர் அகமது, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமல்லாத), கந்தேகவுண்டன் சோதனைச்சாவடி (வெளிச்செல்கை), RTO சோதனை சாவடி, கோவை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

(PTO)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுத்தல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 1/10/2021

Signature of the Officer in-charge, Police Station [signature] 1/10/21.
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

1.10.21 at

Name: பெயர் E. LATHA
Rank: நிலை Inspector of police, VGAC, Coimbatore ...No. எண்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

## Contents of FIR in Cr.No.23/2021/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018.

இன்று 01.10.2021 மதியம் 15.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் C.லதா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருமதி.ஸ்ரீரேகா, தனி வட்டாட்சியர், குடிமைப்பொருள், கோவை தெற்கு மற்றும் சிறப்பு துணை ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.23/2021/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018, Dated: 01.10.2021 ன்படி எதிரி 1) திரு.S.சையத் ஜவாத் அகமது, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில் நுட்பமல்லாத), போக்குவரத்துத் துறை சோதனை சாவடி, கந்தே கவுண்டன் சாவடி (வெளிச்செல்கை), கோவை என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் திருமதி.ஸ்ரீரேகா, தனி வட்டாட்சியர், குடிமைப்பொருள், கோவை தெற்கு மற்றும் சிறப்பு துணை ஆய்வுகுழு அலுவலர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. ந.க.எண்.974/2021/ஐ1, நாள். 01.10.2021. அய்யா, பொருள்: திடீர் தணிக்கை – கோயம்புத்தூர் மாவட்டம் – கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) – திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது – மேல்நடவடிக்கைக்காக புகார் அளித்தல் – சம்மந்தமாக. கோவை மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண்.A2/10/2021 நாள் 30.09.2021 ன் படி சிறப்பு துணை ஆய்வுகுழு அலுவலராக நியமிக்கப்பட்ட நான் கோயம்புத்தூர் மாவட்டம், கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடியில் (வெளிச்செல்கை) பணிபுரியும் அலுவலர்கள் அந்த சோதனை சாவடியை கடந்து செல்லக்கூடிய வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் வாகன வரி வசூல் செய்வதற்காகவும், தற்காலிக உரிமம் வழங்குவதற்காகவும், E-Way Bill மற்றும் Trip Sheet, ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச்சாவடி சீல் வைக்கவும், வாகனங்களை தணிக்கை செய்யாமல் இருக்கவும் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்டம், கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தினை 30.09.2021 ஆம் தேதி மாலை சுமார் 06.30 மணி அளவில் கோவை மாவட்ட ஊழல்

தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.C.லதா மற்றும் காவல் குழுவினர்களுடன் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரங்கள் தெரிய வந்தது. கோவை மாவட்டம், கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பமல்லாத) திரு.S.சையத் ஜவாத் அகமது என்பவரும், உதவியாளராக திருமதி.A.K.நிஷாபானு என்பவரும், அலுவலக உதவியாளராக திருமதி.M.ஜெயந்தி என்பவரும் 30.09.2021 ஆம் தேதி காலை 08.00 மணி முதல் பணியில் இருந்தது தெரியவந்தது. மேற்படி திடீர் தணிக்கையின் போது சோதனைச்சாவடி கோவை - பாலக்காடு கிழக்கு மேற்காக செல்லும் பிராதான சாலையில் தென்புறத்தில் வடக்கு பார்த்த நுழைவுவாயிலுடன் கூடிய கான்கிரீட் கட்டிடத்தில் அமைந்துள்ளது. மேற்படி சோதனைச்சாவடி அலுவலகத்தின் முன்புறம் இரண்டு பெண்கள் நின்றுகொண்டு சோதனை சாவடிக்கு முன்பாக உள்ள நான்குவழி சாலையில் சோதனைசாவடியை கடந்து செல்லும் வாகனங்களை நிறுத்தி அதன் ஓட்டுனர்களை சோதனை சாவடிக்குள் செல்லுமாறு சைகை செய்துகொண்டிருந்தார்கள். அவர்களிடம் மேற்படி வந்த விவரங்களை கூறி விசாரித்த போது அதில் ஒருவர் பெயர் M.ஜெயந்தி என்றும், அவர் கந்தே கவுண்டன் சாவடி போக்குவரத்து துறை (வெளிச்செல்கை) சோதனைசாவடியில் கடந்த 28.02.2021-ம் தேதி முதல் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவர், கேரளா நோக்கி செல்லும் பிற மாநிலங்களான கர்நாடகா, ஆந்திர பிரதேசம் வண்டிகள் Compound Tax, Green Tax போன்ற வரிகள் செலுத்தியுள்ளார்களா என்பதை சரிபார்க்க உரிய ஆவணங்களுடன் சோதனை சாவடியின் அதிகாரியிடம் அனுப்பிவைப்பது அவருடைய வேலை என்று தெரிவித்தார். பின்னர் அருகில் இருந்த மற்றொரு பெண் நபரைப் பற்றி விசாரித்த போது அவர் தன் பெயர் திருமதி.நிஷாபானு என்றும் தான் கடந்த 12.10.2020 முதல் இச்சோதனைச்சாவடியில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அவ்விரண்டு நபர்களையும் அழைத்துக்கொண்டு சோதனைச்சாவடிக்குள் சென்று கொண்டிருந்தபோது சோதனை சாவடியின் நுழைவாயிலுக்கு அருகில் கையில் ஆவணங்களுடன் Counter முன் நின்று கொண்டிருந்த 5 நபர்களை விசாரித்தபோது அவர்கள் அவரவர் வாகனத்தின் ஆவணங்களை காண்பித்து பணம் கொடுத்து முத்திரை பெறுவதற்காக நின்றிருக்கும் விபரத்தை கூறினார்கள். இதனால் மேற்படி நபர்களையும் விசாரிப்பதற்காக போக்குவரத்து துறை சோதனைச் சாவடிக்குள்ளே அழைத்து அமரவைக்கப்பட்டது. பின்னர் சோதனைசாவடிக்குள் நுழைந்தவுடன் பிரதான ஹால் ஒன்று உள்ளது. அந்த பிரதான ஹாலுக்கு கிழபுறம் மேற்குபார்த்த ஓய்வு அறையும், அதன் உள்ளே செல்லும்போது வடக்குபார்த்த ஒரு ஓய்வறையும்

அதனை அடுத்து வடக்குபார்த்த கழிவறையும் உள்ளது. மேலும் இந்த பிரதான ஹாலின் தென்புறம் வடக்குப்பார்த்த மோட்டார் வாகன ஆய்வாளரின் அறையும் அமைந்துள்ளது. பிரதான ஹாலின் தென்மேற்கு மூலையில் நுழைவுவாயில் உள்ள ஒரு கணினி அறையும், அதையடுத்து உணவு அருந்தும் அறையும், அதனையடுத்து கழிவறையும் உள்ளது. கணினி அறைக்கு தென்புறம் இரண்டு பதிவறைகள் வடக்குபார்த்து அமைந்துள்ளன. சோதனை சாவடிக்குள் பிரதான ஹாலில் உள்ள E-way bill மற்றும் Trip sheet-களுக்கு சீல் வைக்கும் கவுண்டருக்கு எதிரில் இருந்த இருக்கையில் காக்கி சீருடையுடன் ஒருவர் அமர்ந்திருந்தார். அவரை விசாரிக்க அவர் தன் பெயர் திரு.S.சையத் ஜவாத் அகமது, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமல்லாத) என்றும், கடந்த 13.08.2021-ம் தேதி முதல் கந்தே கவுண்டன் சாவடி போக்குவரத்து துறை (வெளிச்செல்கை) சோதனைசாவடியில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் பணியாளர்கள் கையிருப்பு பணப்பதிவேடு பற்றி விசாரிக்க அவர் அதை எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட்டதில் 30.09.2021 காலை அவர் பணம் ரூ.2,500/- கொண்டு வந்துள்ளதாகவும், உதவியாளர் திருமதி.நிஷாபானு ரூ.600/- கொண்டு வந்துள்ளதாகவும், அலுவலக உதவியாளர் திருமதி.ஜெயந்தி ரூ.150/- கொண்டுவந்துள்ளதாகவும் பதிவு செய்து கையொப்பம் செய்திருந்தனர். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.S.சையத் ஜவாத் அகமது அவர்களிடம் பணம் பற்றி விசாரிக்க அவர் தனது சீருடை சட்டையின் உள் பாக்கெட்டில் இருந்து ரூ.2,820/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். கையிருப்பு பணப்பதிவேட்டில் ரூ.2,500/- மட்டும் பதிவுசெய்திருந்த விபரத்தை பற்றி அவரிடம் விசாரிக்க, அவர் காலையில் அலுவலகத்திற்கு வரும் போது ரூ.3,000/-ம் கொண்டு வந்ததாகவும், அப்போது டிப்பன் வாங்குவதற்காக ரூ.500/-ஐ கொடுத்துவிட்டதாகவும், டிப்பன் வாங்கியதுபோக மீதி பணம்தான் இந்த 330/- ரூபாய் என்றும், ஆனால் தான் இன்று கையிருப்பு பணபதிவேட்டில் ரூ.2,500/-ஐ மட்டுமே பதிவு செய்ததாகவும், மேற்படி ரூ.330/-ஐ பதிவு செய்ய மறந்துவிட்டதாகவும் கூறினார். அவருடைய பதில் திருப்திகரமாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.330/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் கையிருப்பு பண பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூ.2,500/-ஐ அவரிடமே திருப்பிகொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அலுவலக உதவியாளரான திருமதி.ஜெயந்தியிடம் பணம் பற்றி விசாரிக்க அவர் தனது கைபையிலிருந்து ரூ.120/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதைப்பற்றி விசாரிக்க அவர் இன்று காலை தனது சொந்த செலவுக்காக கொண்டு வந்த பணம் என்றும், அதில் ரூ.30/-ஐ செலவு செய்துவிட்டதாகவும், மீதி பணம் ரூ.120/- மட்டும் இருப்பதாகவும் தெரிவித்தார். அதனால் அந்தப்பணம் ரூ.120/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு உதவியாளராக பணிபுரியும் திருமதி.நிஷாபானுவிடம் பணம் பற்றி விசாரிக்க அவர் தனது கைப்பையிலிருந்து ரூ,250/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதைப்பற்றி விசாரிக்க

அவர் இன்று காலை ரூ.600/-ஐ கொண்டு வந்திருந்ததாகவும், அதில் மதிய உணவிற்கான செலவுகள் போக மீதம் 250 ரூபாயை மட்டும் வைத்திருப்பதாக சொன்னதின் பேரில் அந்தப்பணம் ரூ.250/- ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து E-way Bill மற்றும் Trip Sheet-களுக்கு சீல் வைக்கும் கவுன்டருக்கு எதிரில் திரு.சையத் ஜவாத் அகமது அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன் திறந்தநிலையிலிருந்த மேஜையின் டிராயரை பார்த்த போது, அதில் ஐநூறு, இருநூறு மற்றும் நூறு ரூபாய் நோட்டுகளாக தனித்தனியான கத்தைகளாக கிளிப் போடப்பட்டு காணப்பட்டது, அதனை எடுத்து எண்ணிபார்க்க ரூ.25,510/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி திரு.சையத் ஜவாத் அகமது அவர்களிடம் விசாரிக்க அவர் மேற்படி தொகையானது தமிழ்நாட்டின் எல்லையை கடந்து செல்லும் அனைத்து வாகனங்களும் தமிழக எல்லையை கடந்து சென்றதற்கு ஆதாரமாக வைக்கப்படும் முத்திரைக்காக அதன் ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடம் ரூ.50 முதல் ரூ.500/- வரை வாங்குவது வழக்கம் என்றும், அந்த வகையில் 30.09.2021 ஆம் தேதி காலை 8.00 மணிக்கு தான் அலுவலுக்கு ஆஜரானது முதல் சோதனைக்குழுவினர் வரும் வரை பெறப்பட்ட மாமூல் பணம்தான் இத்தொகை என்றும் கூறினார். மேலும் அவ்வாறு பணிநாளில் மாமூலாக பெற்ற பணத்தில் தனக்கு 50%-ம், உதவியாளர் திருமதி.நிஷாபானுக்கு 25%-ம், அலுவலக உதவியாளர் திருமதி.ஜெயந்திக்கு 25%-ம் என்று பிரித்துகொள்வோம் என்று தெரிவித்தார். மேற்படி மாமூல் பணம் ரூ.25,510/-ஆனது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து இச்சோதனைச்சாவடியில் வசூலிக்கப்பட்ட வேறு தொகை பற்றி விசாரிக்க உதவியாளர் திருமதி.நிஷாபானு சோதனைச்சாவடியை கடந்து செல்லும் வாகனங்களுக்கு தற்காலிக பர்மிட் மற்றும் வாகனத்திற்கு வரி போடுவதற்காக வரும் நபர்களிடமிருந்து பணம் வசூல் செய்து இரசீது போட்டு கொடுப்பது தனது வேலை எனவும் அது சம்மந்தமான விபரங்கள் பிரதானஹாலின் மேற்கு புறம் இருந்த கணினி அறையிலிருக்கும் கணினியிலும், இவ்வலுவலக பதிவேடுகளிலும் குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிவித்து மேற்படி அறைக்கு அழைத்து சென்றார். அங்கிருந்த டேபிள் டிராயரை திறந்து பார்த்தபோது ரூபாய் நோட்டுகள் இருந்தன. அதை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.24,520/- இருந்தது. அந்த தொகையை பற்றி நிஷாபானுவிடம் கேட்டபோது 30.09.2021-ம் தேதி காலை 08.00 மணி முதல் சோதனைக்குழுவினர் வந்தடைந்ததுவரை தற்காலிக பர்மிட் மற்றும் வாகனத்திற்கு வரி மற்றும் அபராதமாக வசூலிக்கப்பட்ட மொத்த அரசு கட்டணம் என்று தெரிவித்தார். மேற்படி தொகை குறித்து இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த வாகன தணிக்கை பதிவேடு, தினசரி கணக்கு பதிவேடு மற்றும் கணினி பதிவுகளை ஒப்பிட்டு சரிபார்த்த போது மேற்படி வசூல் செய்யப்பட்ட தொகையானது சரியாக இருந்ததால் அத்தொகையான ரூ.24,520/-

ஐ அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் மேற்படி தணிக்கையின் போது பணம் கைப்பற்றியது சம்மந்தமாக திரு.சையத் ஜவாத் அகமது அவர்களிடம் விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது. அதனைத்தொடர்ந்து அலுவலக ஆவணங்களான 1) தினசரி கணக்கு பதிவேட்டின் 30.09.2021-ம் தேதியிட்ட, வ.எண்.186 என்றிருந்த பக்கத்தின் நகல், 2) Government of Tamilnadu, Transport Department, Vehicle Inspection Record Original 112638 to 112641 ஆகியவற்றின் நகல், 3) KG Chavadi (Outgoing) Account Statement for AKNISHA for the date 30-Sep-2021 (Generated on 30-Sep-2021 20:04:00) என்ற கணினி Print Out, வருகைப்பதிவேடு 2021 நாள் 01.01.2021 முதல் உள்ளதின் செப்டம்பர் மாதத்தின் வருகை குறிப்பின் நகல் மற்றும் பணியாளர்களின் பணம் கையிருப்பு பதிவேடு-2021-ன் பக்கம் 144 மற்றும 145 ஆகியவற்றின் நகல்கள் ஆகியவைகளை திரு.சையத் ஜவாத் அகமது அவர்களிடம் சான்றொப்பமிடப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த சமயத்தில் சோதனைச்சாவடியில் இரவு அலுவலுக்கு ஆஜரான திருமதி.M.ஈஸ்வரி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமல்லாத), திரு.சரவணக்குமார், உதவியாளர் ஆகியோரிடம் சோதனைச்சாவடி பொறுப்பினை திரு.சையத் ஜவாத் அகமது, உதவியாளர் திருமதி.நிஷாபானு மற்றும் அலுவலக உதவயாளர் திருமதி.ஜெயந்தி ஆகியோர் ஒப்படைக்க அனுமதிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து இரவுப்பணிக்கு ஆஜரானவர்களை தொடர்ந்து பணிபுரிய அறிவுறுத்தப்பட்டனர். மேலும் சோதனை சாவடியில் விசாரணைக்காக அமரவைக்கப்பட்டிருந்த நபர்களான 1) திரு.R.செந்தில்குமார், 2) திரு.S.செந்தில்குமார், 3) திரு.S.ஜோதிமுருகன், 4) திரு.V.ஏழுமலை, 5) திரு.A.கபிலன் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களிடமிருந்து ஓட்டுனர் உரிமம் நகல், அவரவர் வாகனத்திற்குரிய ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனைச்சாவடி அலுவலர்களிடம் முத்திரை பெறுவதற்காக 1) திரு.R.செந்தில்குமார், 2) திரு.S.செந்தில்குமார், 3) திரு.S.ஜோதிமுருகன், 4) திரு.V.ஏழுமலை, 5) திரு.A.கபிலன் ஆகியோர்கள் கொடுப்பதற்காக வைத்திருந்த பணத்தை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கை குறித்து 30.09.2021 ஆம் தேதி சுமார் 18.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 01.10.2021 ஆம் தேதி 00.45 மணிக்கு ஒரு நடவடிக்கை தயார் செய்யப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.25,840/– மற்றும் இதர ஆவணங்கள் இத்துடன் இணைத்துள்ளேன். இப்புகார் குறித்து உரிய புலன்விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 01/10/2021 தனி வட்டாட்சியர்,

குடிமைப்பொருள், கோவை தெற்கு மற்றும் சிறப்பு துணை ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை. இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, 2) கைப்பற்றப்பட்ட பணம், 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். Sir, Received the complaint on 01.10.2021 at 15.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.23/2021/AC/CB u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 at 15.30 hrs against Tr.S.Syed Jawad Ahamed, Motor Vehicle Inspector (Non Technical), R.T.O. Check Post, Kande Govundan Chavudi (Out Going), Coimbatore. Sdxxxxx 01/10/2021 (C.Latha), Inspector of Police, Vigilance and Anti Corruption, Coimbatore. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு அத்துடன் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் புகார் மனுவுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களை இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

1/10/21.

(C.லதா)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கோயம்புத்தூர்.